# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
# தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2019 ஆகஸ்ட்

## 44 - இஸ்லாம்

## பழைய பாடத்திட்டம்

## புள்ளியிடும் திட்டம்

பரீட்சார்த்திகள் இவ்வினாத்தாளில் உள்ள பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

**பகுதி I**

02 வினாக்களுக்கும் - 02 x 20 = 40 புள்ளிகள்

**பகுதி II**

03 வினாக்களுக்கும் - 03 x 20 = 60 புள்ளிகள்

**மொத்தம்**

05 வினாக்களுக்கும் - 40 + 60 = 100 புள்ளிகள்

**இறுதிப் புள்ளி கணக்கிடல்**

| | | |
|---|---|---|
| பத்திரம் I க்கு | - | 100 புள்ளிகள் |
| பத்திரம் II க்கு | - | 100 புள்ளிகள் |
| இறுதிப் புள்ளிகள் | - | 200 / 2 புள்ளிகள் = 100 புள்ளிகள் |

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**




(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

○ ○ ○

OLD
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

05.08.2019 / 0830 – 1030

ඉස්ලාම් I
**இஸ்லாம் I**
Islam I

**44 T I**

පැය දෙකයි
**இரண்டு மணித்தியாலம்**
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** அஸ்மாஉல் ஹுஸ்னாவில் ஒன்றான 'அஸ்ஸலாம்' என்ற சொல் குறிக்கும் பொருள்
(1) அருள்பாலிப்பவன் (2) சாந்தியளிப்பவன் (3) மிகவும் மன்னிப்பவன்
(4) உணவளிப்பவன் (5) மிகவும் தூய்மையானவன்

**2.** ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிமுறைகளில் ஒன்றான 'வரஉ' என்ற அறபுச் சொல் உணர்த்தும் பொருள்
(1) பேணுதல் (2) இறையச்சம் (3) பற்றற்ற வாழ்வு (4) இறை நேசம் (5) இறைத் திருப்தி

**3.** நபித்தோழர்கள் முதன் முதலில் ஹிஜ்ரத் சென்ற இடம்
(1) தாயிப் (2) ஹபசா (3) மதீனா (4) ஷாம் (5) யெமன்

**4.** ஷிர்க் ஹபிக்கு ஓர் உதாரணம்
(1) அல்லாஹ் அல்லாதவற்றை வணங்குதல்
(2) ஜின்களை வணங்குதல்
(3) சூனியம் செய்தல்
(4) சட்டம் இயற்றும் அதிகாரத்தை ஒருவருக்கு வழங்குதல்
(5) அல்லாஹ் அல்லாதவற்றிற்காக பலியிடல்

**5.** ஹிஜ்ரத்தின் பின்னர் நபி (ஸல்) அவர்கள் முதன் முதலில் நிர்மாணித்த பள்ளிவாசல்,
(1) மஸ்ஜிதுன் நபவி ஆகும். (2) மஸ்ஜிதுன் நமிரா ஆகும். (3) மஸ்ஜிதுல் ஹராம் ஆகும்.
(4) மஸ்ஜிதுல் குபா ஆகும். (5) மஸ்ஜிதுல் கிப்லதைன் ஆகும்.

**6.** 100 ஆடுகளை வைத்திருக்கும் ஒருவர் ஸகாத்தாகக் கொடுக்கவேண்டிய ஆடுகளின் எண்ணிக்கை
(1) ஒன்று (2) இரண்டு (3) மூன்று (4) நான்கு (5) ஐந்து

**7.** 'பர்ளு கிபாயா' வுக்கு ஓர் உதாரணம்,
(1) ஐங்காலத் தொழுகை ஆகும். (2) நோன்பு ஆகும்.
(3) பெற்றோரைப் பராமரித்தல் ஆகும். (4) தேச, சமூக நலன்களில் பங்குகொள்ளல் ஆகும்.
(5) குழந்தைகளைப் பராமரித்தல் ஆகும்.

**8.** இலங்கை முஸ்லிம்களது கல்வி வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய வெளிநாட்டுப் பிரமுகர்,
(1) இப்னு பதூதா ஆவார். (2) காலிதுப்னு பகாயா ஆவார். (3) ஓராபி பாஷா ஆவார்.
(4) வஹ்பிப்னு அபீ ஹப்சா ஆவார். (5) ஐ. டப்ள்யூ. பால்க் ஆவார்.

**9.** இலங்கையிலிருந்து ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்வோர் இஹ்ராமுக்காக நிய்யத்து வைக்க வேண்டிய இடம்
(1) அல்-ஜுஹ்பா (2) தாதுல் இராக் (3) கர்னுல் மனாஸில்
(4) துல் ஹுலைபா (5) யலம்லம்

**10.** நபி (ஸல்) அவர்களது மக்கா கால தஃவாவில் இடம்பெற்ற இஸ்லாத்தின் அடிப்படைகளை உள்ளடக்கியுள்ள விடையினைத் தெரிவுசெய்க.
(1) தௌஹீத், ரிஸாலத், மஆத் (2) கிலாபத், ரிஸாலத், இபாதத்
(3) ரிஸாலத், முஆமலத், ஹிதாயத் (4) ரிஸாலத், இபாதத், வராஸத்
(5) ஜினாயத், இபாதத், மஆத்

**11.** ஹதீஸ், இஸ்லாமிய சட்டக்கலை ஆகிய இரு துறைகளுக்கும் பங்களிப்பு செய்தவர்கள்,
(1) இமாம் சுயூதி, இமாம் நவவி (ரஹ்) ஆகியோராவர்.
(2) இமாம் திர்மிதி, இமாம் நஸஈ (ரஹ்) ஆகியோராவர்.
(3) இமாம் இப்னு மாஜா, இமாம் ராபிஈ (ரஹ்) ஆகியோராவர்.
(4) இமாம் மாலிக், இமாம் அஹ்மது (ரஹ்) ஆகியோராவர்.
(5) இமாம் அபூயூசுப், இமாம் பைஹகி (ரஹ்) ஆகியோராவர்.

**12.** இஸ்னாத் ஸஹாபி வரை செல்லும் ஹதீஸ்
(1) மவ்கூப் (2) மர்பூஃஹ் (3) முர்ஸல் (4) மக்தூஹ் (5) மவ்லூஹ்

**13.** யமாமா யுத்தத்தில், நபித்தோழர்கள் ஷஹீதாக்கப்பட்டதையடுத்து அல்-குர்ஆனைத் தொகுக்க வேண்டுமென்று ஆலோசனை வழங்கிய நபித் தோழர்,
(1) அபூபக்ர் (ரலி) ஆவார். (2) உமர் (ரலி) ஆவார்.
(3) உஸ்மான் (ரலி) ஆவார். (4) முஆவியா (ரலி) ஆவார்.
(5) உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) ஆவார்.

**14.** ஸகாத் பெறத் தகுதியானோரில் 'அர்ரிகாப்' எனப்படுவோர்
(1) கடனாளிகள் (2) வழிப்போக்கர்கள்
(3) ஏழைகள் (4) புதிதாக இஸ்லாத்தை தழுவியவர்கள்
(5) உரிமைச் சீட்டு எழுதப்பட்ட அடிமைகள்

**15.** இஸ்லாம் அனுமதித்துள்ள வியாபார முறைகளில் கூட்டு வியாபாரத்தைக் குறிக்கும் சொல்
(1) இஆரா (2) இஜாரா (3) முஷாரகா (4) ஸலம் (5) முஸாரஆ

**16.** இஸ்லாம் உணவுப் பொருட்களை பதுக்கி வைப்பதைத் தடை செய்திருப்பதற்கான பிரதான காரணம்
(1) உணவுப் பொருட்கள் பழுதடைதல்
(2) உணவுப் பொருட்களின் விலை அதிகரித்தல்
(3) பொதுமக்கள் பாதிப்படைதல்
(4) உற்பத்தியாளருக்கு இழப்பு ஏற்படல்
(5) உணவுப் பொருட்களை நீண்ட நாட்கள் சேமித்து வைப்பது கஷ்டமாக இருத்தல்

**17.** இஸ்லாமிய வர்த்தகமுறைகளில் ஒன்றான 'ரஹ்ன்' பற்றிய சரியான கூற்று
(1) இருவர் குறிப்பிட்டதொரு தொகைப் பணத்தை முதலீடு செய்து வர்த்தகத்தில் ஈடுபடல்
(2) ஒரு தரப்பினரது மூலதனத்தையும் மறு தரப்பினரது உழைப்பையும் வைத்து வர்த்தகத்தில் ஈடுபடல்
(3) ஒரு பொருளை குறிப்பிட்டதொரு காலப்பிரிவுக்கு இரவலாக வழங்குதல்
(4) உற்பத்தியில் சமமாக பங்குபெறல் என்ற அடிப்படையில் ஒருவருக்கு விவசாய பூமியை வழங்குதல்
(5) ஒருதொகைப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக குறிப்பிட்டவொன்றை அடகு வைத்தல்

**18.** குலபாஉர்ராஷிதீன் தொடர்பான விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - மூன்றாம் கலீபா
B - முஸைலமாவுக்கு எதிராக போர் தொடுத்தவர்.
C - ஹிஜ்ரத்தின்போது நபி (ஸல்) அவர்களுடன் மதீனாவுக்குச் சென்றவர்.
D - கடற்படையை அறிமுகப்படுத்தியவர்.
E - ஹிஜ்ரி நாட்காட்டி ஆண்டுக் கணிப்பீட்டு முறையை அறிமுகப்படுத்தியவர்.
F - ஹுதைபிய்யா உடன்படிக்கையின்போது சமாதான பேச்சுவார்த்தைக்காக குறைஷிகளின் பக்கம் அனுப்பப்பட்டவர்.

மேலுள்ளவற்றுள் கலீபா உஸ்மான் (ரலி) அவர்களுடன் தொடர்பான விடயங்களைக் கொண்ட தொகுதியினைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, D, F (3) B, C, D (4) C, E, F (5) D, E, F

**19.** வாரிசுரிமைச் சட்டத்தில் 'அஸபா' எனப்படுவோர்

(1) அல்-குர்ஆன், சுன்னா குறிப்பிடும் வரையறுக்கப்பட்ட பங்கை பெறும் வாரிசுகளாவர்.
(2) தந்தை வழி நெருங்கிய உறவினராவர்.
(3) அல்-குர்ஆன், சுன்னாவில் பங்குகள் வரையறுத்துக் குறிப்பிடப்படாத மரணித்தவருக்கு நெருக்கமான ஆண் வாரிசுகளாவர்.
(4) குறிப்பிட்ட சிலர் இல்லாதபோது பங்குபெறுபவராவர்.
(5) மரணித்தவருக்கு நெருங்கிய உறவினர்கள் எவரும் இல்லாதபோது பங்குபெறும் தூரத்து உறவினராவர்.

**20.** விவாகரத்து முறைகளுள் ஒன்றான 'குல்உ' என்பது

(1) மனைவி, கணவனிடம் ஒரு தொகைப் பணம் அல்லது ஒரு பொருளைக் கொடுத்து விவாகரத்தைப் பெற்றுக்கொள்ளல் ஆகும்.
(2) கணவன், மனைவியை விபச்சார குற்றம் சாட்டி மனைவியை விவாகரத்துச் செய்தல் ஆகும்.
(3) சத்தியத்தின் பின்னர் ஏற்படும் விவாகரத்து ஆகும்.
(4) தலாக் ரஜஈயின் பின்னர் ஏற்படும் விவாகரத்து ஆகும்.
(5) மனைவியை தாய்க்கு ஒப்பிடுவதன் மூலம் ஏற்படும் விவாகரத்து ஆகும்.

**21.** மரணித்தவரது சொத்துக்களை பகிர்ந்தளிப்பது தொடர்பான சட்ட விதிகளை உள்ளடக்கிய கலை

(1) இல்முல் அகீதா எனப்படும். (2) இல்முல் பிக்ஹு எனப்படும்.
(3) இல்முல் பலாகா எனப்படும். (4) இல்முல் ஜரஹ்வத்த.்.தீல் எனப்படும்.
(5) இல்முல் மீராஸ் எனப்படும்.

**22.** புனித ரமழான் மாத நோன்பினை நோற்பதற்கு போதியளவு தேக ஆரோக்கியம் அற்ற வயோதிபர்

(1) தௌபா செய்ய வேண்டும்.
(2) பித்ரா கொடுக்க வேண்டும்.
(3) அறுபது ஏழைகளுக்கு உணவளித்தல் வேண்டும்.
(4) நோன்பை கழா செய்ய வேண்டும்.
(5) கப்பாரா கொடுக்க வேண்டும்.

**23.** உஸூலுத் தப்ஸீர் கலைக்கு பங்களிப்பு செய்த முன்னோடிகளுள் ஒருவர்,

(1) இமாம் ஸமஹ்ஷரி ஆவார். (2) இமாம் ராஸி ஆவார். (3) இமாம் சுயூதி ஆவார்.
(4) இமாம் தன்தாவீ ஆவார். (5) இமாம் இப்னு ஜரீர் அத்தபரி ஆவார்.

**24.** குறிப்பிட்ட சிலரின் காரணமாக வேறு சிலருக்கு பங்கு குறைவாகக் கிடைத்தல்

(1) ஹஜப் (2) ஹஜபுன்நுக்ஸான் (3) ஹஜபுல் ஹிர்மான்
(4) அஸபா (5) தவுல் அர்ஹாம்

**25.** பின்வருவனவற்றைக் கருதுக

A - முனாபிக்களின் பண்புகள் பற்றி விளக்கும் வசனங்கள்
B - நீண்ட வசனங்கள், நீண்ட அத்தியாயங்கள்
C - முன்னைய வேதங்கள் பற்றிய உண்மைத் தன்மையை விளக்கும் வசனங்கள்
D - வசனக் கவர்ச்சி, சிறிய ஆயத்துக்கள் உள்ளவை
E - மனிதர்களே! என விளிக்கும் வசனங்கள்

மேற்படி கூற்றுகளுள் மதனி சூராக்களுடன் தொடர்பான விடையினைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, C, D (3) A, D, F (4) B, C, E (5) C, D, E

**26.** ஒருவரது கையிருப்பில் ரூபா. 1, 000, 000 பணம் இருக்கிறது. அவர் செலுத்தவேண்டிய கடன் ரூபா 200, 000. குறித்த வருடத்தில் ஸகாத்தின் நிஸாப் ரூபா 700, 000 எனின். அவர் வருட இறுதியில் செலுத்த வேண்டிய ஸகாத்தின் அளவு

(1) ரூபா 5, 000 ஆகும். (2) ரூபா 10, 000 ஆகும். (3) ரூபா 15, 000 ஆகும்.
(4) ரூபா 20, 000 ஆகும். (5) ரூபா 25, 000 ஆகும்.

**27.** ஒரு முஸ்லிம், ஹலாலான உணவுவகைகளை உட்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்படுவதற்கான காரணம், அவை

(1) உடல், உள ஆரோக்கியத்திற்கு உகந்தவையாகும்.
(2) உடல் வளர்ச்சிக்கு அவசியமாகும்.
(3) ஷரீஆவால் வலியுறுத்தப்பட்டுள்ளமையாகும்.
(4) சுத்தமும் சுகாதாரமுமிக்கவையாகும்.
(5) சக்தியும் சுவையுமிக்கவையாகும்.

**28.** ‘முஅவ்விததைன்’ என அழைக்கப்படும் சூராக்களாவன,

(1) சூரா யாஸீன், சூரா பகரா என்பனவாகும். (2) சூரா நாஸ், சூரா பலக் என்பனவாகும்.
(3) சூரா பகரா, சூரா ஆலஇம்ரான் என்பனவாகும். (4) சூரா கஹ்பு, சூரா முஸம்மில் என்பனவாகும்.
(5) சூரா பாதிஹா, சூரா பகரா என்பனவாகும்.

**29.** “வாலிபர்களே! உங்களில் வசதிபடைத்தவர்கள் திருமணம் செய்துகொள்ளவும். ஏனெனில் அது பார்வையைக் கட்டுப்படுத்தவும் கற்பைப் பேணவும் சிறந்ததாகும். வசதியற்றவர்கள் நோன்பு நோற்பது அவர்களுக்குப் பாதுகாப்பானதாகும்.” என்பது,

(1) அல்-குர்ஆனின் கூற்றாகும். (2) ஒரு ஸஹாபியின் கூற்றாகும்.
(3) நபி (ஸல்) அவர்களது கூற்றாகும். (4) ஒரு இமாமின் கூற்றாகும்.
(5) ஒரு சூபி ஞானியின் கூற்றாகும்.

**30.** பின்வருவனவற்றுள் தொழுகையின் மூலம் ஒருவருக்கு கிடைக்கும் ஆன்மீக பயன்பாடுகளில் ஒன்று

(1) இறையருள் (2) உடல், உடை சுத்தம்
(3) ஆரோக்கிய வாழ்வு (4) நேரமுகாமைத்துவப் பயிற்சி
(5) தலைமைத்துவ கட்டுப்பாட்டுக்கான பயிற்சி

**31.** குர்ஆனியக் கலைகளுடன் தொடர்பான ‘முதஷாபிஹாத்’ என்பது பற்றிய சரியான கூற்று

(1) பொருள் தெளிவான அல்-குர்ஆன் வசனங்கள்
(2) பல பொருள்களுக்கு இடம்பாடான அல்-குர்ஆன் வசனங்கள்
(3) சட்டம் மாற்றப்பட்ட அல்-குர்ஆன் வசனங்கள்
(4) சூராக்களின் ஆரம்பத்தில் இடம்பெறும் தனி எழுத்துக்கள்
(5) அகீதா தொடர்பான அல்-குர்ஆன் வசனங்கள்

**32.** மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் ‘யவனர்’ எனும் பதம் அரபு மக்களையே சுட்டிக்காட்டுகிறது, எனக் குறிப்பிடும் மகாவம்ச மொழிபெயர்ப்பாளர்,

(1) அலெக்ஷாந்தர் ஜோன்ஸ்டன் ஆவார். (2) கலாநிதி பாலேந்திரா ஆவார்.
(3) வில்லியம் மூர் ஆவார். (4) வில்லியம் ஹைகர் ஆவார்.
(5) சீன யாத்திரிகர் பாஹியன் ஆவார்.

**33.** இறை வழிகாட்டலான வேதத்தையும் ஸுஹுஃபையும் பெற்றுக்கொண்ட இறைத்தூதர்,
(1) மூஸா (அலை) ஆவார்.
(2) ஈஸா (அலை) ஆவார்.
(3) தாவூத் (அலை) ஆவார்.
(4) இப்ராஹீம் (அலை) ஆவார்.
(5) நூஹ் (அலை) ஆவார்.

**34.** ஷரீஆவின் அடிப்படையில் குற்றங்களுக்கு தண்டனை வழங்கும்போது கவனத்திற்கொள்ளவேண்டிய விடயம் தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் **பிழையானது**
(1) தண்டனை பொருத்தமானதாக காணப்படல்
(2) தண்டனை சட்டரீதியானதாக காணப்படல்
(3) தண்டனை குற்றங்களைப் பொறுத்து வேறுபடல்
(4) தண்டனை வழங்கும்போது குற்றமிழைத்தவரின் அந்தஸ்து, பதவி போன்றவற்றை கவனத்திற் கொள்ளல்
(5) தண்டனை சமூகப் பாதுகாப்பை இலக்காகக் கொண்டிருத்தல்

**35.** பின்வருவனவற்றுள் நபிமார்களிடம் **இருக்கக்கூடாத** பண்புகளை உள்ளடக்கிய தெரிவு யாது?
(1) கியானத், கித்பு, கித்மான், பதானத்
(2) தப்லீக், பலாதத், கியானத், கித்பு
(3) கித்மான், கித்பு, கியானத், சித்கு
(4) பலாதத், கியானத், கித்பு, பதானத்
(5) பலாதத், கியானத், கித்பு, கித்மான்

**36.** 'அய்யாமுத் தஷ்ரீக்' என்பது,
(1) முஹர்ரம் மாதம் பிறை 9, 10, 11 ஆகும்.
(2) ஷஃபான் மாதம் பிறை 11, 12, 13 ஆகும்.
(3) துல்ஹஜ் மாதம் பிறை 11, 12, 13 ஆகும்.
(4) ரபீஉல் அவ்வல் மாதம் பிறை 13, 14, 15ஆகும்.
(5) ரஜப் மாதம் பிறை 28, 29, 30 ஆகும்.

**37.** இமாம் புஹாரி (ரஹ்) அவர்களின் ஆசிரியர்களுள் ஒருவர்
(1) இமாம் அபூதாவூத் (ரஹ்)
(2) இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்)
(3) இமாம் நஸாஈ (ரஹ்)
(4) முஹம்மது இப்னு அஹமது மரூஸி (ரஹ்)
(5) இமாம் தபராணி (ரஹ்)

- **38** தொடக்கம் **41** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் **X, Y** என்னும் நிரல்களின் கீழ் தரப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் ஒரு வகையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. அதன்படி **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப **Y** நிரலை ஒழுங்குபடுத்தும்போது பொருத்தமாக அமையும் சேர்மானத்தைத் தெரிவு செய்க.

**38.**

| X | Y |
|---|---|
| (i) இமாம் ஷாபிஈ (ரஹ்) | A - முஅத்தா |
| (ii) இமாம் அபூஹனீபா (ரஹ்) | B - முஸ்னத் |
| (iii) இமாம் மாலிக் (ரஹ்) | C - பிக்ஹுல் அக்பர் |
| (iv) இமாம் அஹ்மது (ரஹ்) | D - அல்-உம்மு |

(1) A B C D (2) B C D A (3) C B A D (4) D B A C (5) D C A B

**39.**

| X | Y |
|---|---|
| (i) தவ்பா | A - இறை நேசம் |
| (ii) ரிழா | B - உளத்தூய்மை |
| (iii) இக்லாஸ் | C - இறை திருப்தி |
| (iv) மஹப்பத் | D - பாவ மன்னிப்பு |

(1) A D C B (2) B C A D (3) B D C A (4) D A B C (5) D C B A

**40.**

| X | Y |
|---|---|
| (i) வலி | A - சாட்சி |
| (ii) ஷாஹித் | B - பாதுகாவலர் |
| (iii) மஹர் | C - திருமணத்தின்போது மணமகன் வழங்கும் விருந்து |
| (iv) வலீமா | D - திருமணத்தின்போது மனைவிக்கு கணவன் வழங்கும் பரிசு |

(1) A C B D (2) B A D C (3) B C A D (4) C D A B (5) D A C B

41.

| X | Y |
|---|---|
| (i) கிலாபத் | A - அற்புதம் |
| (ii) இபாதத் | B - பூமியை வளப்படுத்தல் |
| (iii) மு.்.ஜிஸத் | C - பிரதிநிதித்துவம் |
| (iv) இமாரத் | D - வணக்கம் |

(1) A C D B (2) A D B C (3) B D C A (4) C D A B (5) D B C A

42. ‘ஸஹீபா ஸாதிகா’ என்ற ஹதீஸ் தொகுப்பை திரட்டிய நபித்தோழர்,
(1) அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) ஆவார். (2) அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) ஆவார்.
(3) ஸ.்.து இப்னு அபீவக்காஸ் (ரலி) ஆவார். (4) அனஸ் இப்னு மாலிக் (ரஹ்) ஆவார்.
(5) ஸுபைர் இப்னுல் அவாம் (ரலி) ஆவார்.

43. இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் பிறந்த ஆண்டு
(1) ஹி : 204 (2) ஹி : 205 (3) ஹி : 206 (4) ஹி : 207 (5) ஹி : 208

44. இஸ்லாமிய முக்கிய கடமைகளுள் உம்ராவில் **இடம்பெறாத** ஒரு செயல்
(1) இஹ்ராம் (2) தவாப் (3) ஸ.்.யு (4) ஹல்க் (5) அறபாவில் தரித்தல்

- **45** தொடக்கம் **50** வரையிலான வினாக்களில் இரண்டு வகையான கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிக்கூற்றுகளுக்கு பின்வரும் (1), (2), (3), (4), (5) என்பவற்றில் மிகப் பொருத்தமானதை தெரிவுசெய்து அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.

| **இலக்கம்** | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| **45.** | வாஸிலுப்னுல் அதா, இமாம் ஹஸனுல் பஸரியின் ஆசிரியராவார். | மு.்.தஸிலாக்கள் அல்-குர்ஆன், சுன்னாவின் கருத்துக்களை முதன்மைப்படுத்துகின்றனர். |
| **46.** | ஆண்கள் வெள்ளி மோதிரம் அணிவதில் தவறில்லை. | தீங்கிழைக்க வரும் பிராணிகளையும் தீயினால் சுட்டெரிப்பதை ஷரீஆ தடைசெய்கின்றது. |
| **47.** | முதவாதிரான ஹதீஸ்கள் நம்பகமானவைகளாகும். | ஹஸன் தரத்திலுள்ள ஹதீஸ்களை ஆதாரமாகக் கொள்ள முடியாது. |
| **48.** | இஸ்லாமிய பொருளாதாரக் கோட்பாடு தெய்வீகமானதாகும். | கியாஸும் ஸஹாபாக்களது இஜ்மாவும் சம தரத்தில் நோக்கப்படுகின்றன. |
| **49.** | ‘உர்பு’ ஐ ஒரு சட்ட மூலாதாரமாக கொள்ள முடியாது. | ஹராத்திற்கு வழிவகுப்பவைகளும் ஹராம் ஆகும். |
| **50.** | மக்காவிலுள்ள சந்தை நிலவரங்களைக் கண்காணிப்பதற்காக ஸஈத் இப்னு ஸஈத் அல்ஆஸ் (ரலி) என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார்கள். | மதீனாவிலுள்ள சந்தை நிலவரங்களைக் கண்காணிப்பதற்காக உமர் (ரலி) அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

## පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம்: **44**  විෂයය / பாடம்: **இஸ்லாம்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 4 | 21. | 1 | 31. | 2 | 41. | 4 |
| 02. | 1 | 12. | 1 | 22. | 1/5 | 32. | 4 | 42. | 1/2 |
| 03. | 2 | 13. | 2 | 23. | 3 | 33. | 1 | 43. | 1 |
| 04. | 4 | 14. | 5 | 24. | 2 | 34. | 4 | 44. | 5 |
| 05. | 1/4 | 15. | 3 | 25. | 1 | 35. | 5 | 45. | 4 |
| 06. | 1 | 16. | 3 | 26. | 4 | 36. | 3 | 46. | 1 |
| 07. | 4 | 17. | 5 | 27. | 3 | 37. | 2 | 47. | 3 |
| 08. | 3 | 18. | 2 | 28. | 2 | 38. | 5 | 48. | 3 |
| 09. | 5 | 19. | 3 | 29. | 3 | 39. | 5 | 49. | 2 |
| 10. | 1 | 20. | 1 | 30. | 1 | 40. | 2 | 50. | 1 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

ඉස්ලාම් II
இஸ்லாம் II
Islam II

44 T II

06.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

- **பகுதி I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் **20** புள்ளிகள் உரித்தாகும்.

## பகுதி I

**1.** பின்வரும் சோடிச் சொற்களுக்கிடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுக.

(i) ஈமான் முஜ்மல் - ஈமான் முபஸ்ஸல்

(ii) மக்கி வசனம் - மதனி வசனம்

(iii) முதவாதிர் - ஆஹாத்

(iv) அக்லாக் - முஆமலாத்

**2.** (i) 'தக்வா' என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

(ii) ஒரு முஸ்லிமின் வாழ்வில் தக்வா பெறும் முக்கியத்துவம் பற்றி அல்-குர்ஆன், ஸுன்னாவின் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(iii) ஒரு முஸ்லிம் தனது அன்றாட வாழ்க்கையில் தக்வாவைக் கடைப்பிடிப்பதால் கிடைக்கும் நன்மைகள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு, அவற்றை சுருக்கமாக விளக்குக.

(iv) ஒரு முஸ்லிமின் ஆன்மீக வாழ்வுக்குத் தடையாக அமையும் **ஐந்து** விடயங்களை சுருக்கமாக விளக்குக.

**3.** (i) பர்ளு ஐன், பர்ளுகிபாயா ஆகிய ஒவ்வொன்றையும் உதாரணங்களுடன் விளக்குக.

(ii) இபாதாவின் நோக்கங்கள் **ஐந்தினை** விளக்குக.

(iii) மனித வாழ்வின் அனைத்து செயற்பாடுகளும் இபாதத்தாக அமைவதற்கு தேவையான நிபந்தனைகள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக.

(iv) ஒரு முஸ்லிம் ஸகாத்தை நிறைவேற்றுவதால் கிடைக்கும் சமூகப் பயன்பாடுகள் **ஐந்தினைச்** சுருக்கமாக விவரிக்குக.

## பகுதி II

**4.** (i) இஸ்லாம், வாழ்வாதாரத்துக்காக உழைப்புக்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை அல்-குர்ஆன், ஸுன்னாவின் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(ii) ஒரு முஸ்லிம் தனது அயல் வீட்டாருடன் பேணவேண்டிய உறவுமுறை பற்றிய இஸ்லாத்தின் போதனைகளை விவரிக்குக.

**5.** (i) "இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டது." என்ற சிந்தனை வளர ஏதுவான காரணங்களை விளக்குக.

(ii) 'தக்லீத்' சிந்தனையினால் இஸ்லாமிய சமூகத்தில் ஏற்பட்ட பாதக விளைவுகளை ஆராய்க.

**6.** (i) இஸ்லாத்தில் குடும்ப வாழ்வின் முக்கியத்துவம் பற்றி அல்-குர்ஆன், ஹதீஸ் என்பவற்றின் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(ii) ஒரு முஸ்லிம் தனது மனைவியை தலாக் சொல்வதனால் ஏற்படும் குடும்ப, சமூக ரீதியான பாதிப்புகளை விவரிக்குக.

**7.** நபி (ஸல்) அவர்களது காலத்தில் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு பின்வருவன ஆற்றிய பங்களிப்பை ஆராய்க.

(அ) மஸ்ஜிதுந் நபவி

(ஆ) நபி (ஸல்) அவர்கள் செய்துகொண்ட உடன்படிக்கைகள்

**8.** பின்வரும் தலைப்புக்களை விளக்குக.

(i) மனித வாழ்வு பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்

(ii) முஸ்லிம்கள் பிற சமூகங்களுடன் நல்லுறவைப் பேண வேண்டியதன் அவசியம்

❊ ❊ ❊

01.

பின்வரும் சோடிச் சொற்களுக்கிடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுக.

(i) ஈமான் முஜ்மல் - ஈமான் முபஸ்ஸல்

(ii) மக்கி வசனம் - மதனி வசனம்

(iii) முதவாதிர் - ஆஹாத்

(iv) அக்லாக் - முஆமலாத்

(i) **ஈமான் முஜ்மல் - ஈமான் முபஸ்ஸல்**

- ஈமான் முஜ்மல் என்பது **சுருக்கமான ஈமான்** என பொருள்படும். ஈமான் முபஸ்ஸல் என்பது **விரிவான ஈமான்** என பொருள்படும்.

- ஈமான் முஜ்மல் என்பது **'லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்'** என்பதைக் குறிக்கும். ஈமான் முபஸ்ஸல் என்பது ஈமான் கொள்ள வேண்டிய 6 அம்சங்களின் விரிவைக் குறிக்கும்.

- ஒருவர் இஸ்லாத்தை கொள்கையாக ஏற்றுக்கொள்வதற்கு ஈமான் முஜ்மல் போதுமானதாகும். ஈமான் முபஸ்ஸல் இஸ்லாத்தின் கொள்கைகளை விரிவாக விளங்கிக்கொள்வதற்கு அவசியமாகும்.

- ஈமான் முபஸ்ஸலில் தெளிவில்லாதோரும் முஸ்லிமாக இருக்கலாம். ஆனால் ஈமான் முஜ்மலில் தெளிவில்லாதோர் முஸ்லிமாக இருக்க முடியாது.

- ஈமான் முபஸ்ஸல் புலமைத்துவம் சார்ந்தது. ஈமான் முஜ்மல் இதற்கு மாற்றமானது.

(இதுபோன்ற ஐந்து வேறுபாடுகள் குறிப்பிட்டிருப்பின் $1x5 = 5$ புள்ளிகள்)

(ii) **மக்கி வசனம் - மதனி வசனம்**

- மக்கி என்ற சொல் மக்காவை சார்ந்தது எனவும் மதனி என்ற சொல் மதீனாவை சார்ந்தது எனவும் பொருள்படும்.
- மக்கி வசனங்கள் மக்காவில் இறங்கியதைக் குறிக்கும். மதனி வசனங்கள் மதீனாவில் இறங்கியதைக் குறிக்கும். மக்கி வசனங்கள் ஹிஜ்ரத்துக்கு முன்னர் இறங்கியவை. மதனிவசனங்கள் ஹிஜ்ரத்துக்கு பின்னர் இறங்கியவை. மக்கி வசனங்கள் மக்காவிலும் மக்காவை சூழவுள்ள இடங்களிலும் இறங்கி யவை. மதனி வசனங்கள் மதீனாவிலும் மதீனாவை சூழவுள்ள இடங்களிலும் இறங்கியவை.
- மக்கி வசனங்கள் ஓசை நயமும் எதுகை மோனையும் கொண்டவை. மதனி வசனங்களில் அது குறைவு.
- மக்கி வசனங்கள் 'மனிதர்களே!' என்று விளித்து பெரும்பாலும் பேசும். ஆனால், மதனி வசனங்கள் பெரும்பாலும் 'விசுவாசிகளே!' என அழைத்துப் பேசும்.
- மக்கி வசனங்கள் சான்றுகளை முன்வைக்கின்ற போது 'கல்லா' என்ற சொல்லைப் பிரயோகிக்கும் மதனி வசனங்களில் அவ்வாறு காணப்படுவதில்லை.
- மக்கி வசனங்கள் வசனக் கவர்ச்சி கொண்டதாகவும் , சிறிய ஆயத்துக்கள் மற்றும் சிறிய அத்தியாயங்கள் கொண்டதாகவும் காணப்பட, மதனி வசனங்கள் நீண்ட வசனங்கள், நீண்ட அத்தியா-யங்கள் கொண்டதாக காணப்படும்.
- மக்கி வசனங்களில் அதிகம் சத்தியம் இடம்பெறும். மதனி வசனங்களில் மிகக் குறைவு.

- மக்கி வசனங்களில் ஹுரூபுல் முகத்தஆத் பிரயோகம் சூறாக்களின் ஆரம்பத்தில் இடம்பெற்றிருக்கும் மதனி சூராக்களில் மிகக் குறைவு.
- மக்கி வசனங்களில் சஜதா திலாவத் இடம்பெறும் மதனி வசனங்களில் இல்லை.
- மக்கி சூராக்கள் பெரும்பாலும் அகீதா, அக்லாக் பற்றி குறிப்பிடும். மதனி சூராக்கள் பெரும்பாலும் இபாதா, முஆமலாத் பற்றி குறிப்பிடும்.
- மக்கி வசனங்கள் வரலாற்று நிகழ்வுகளின் ஊடாக இஸ்லாமிய பிரச்சாரத்தின் இயல்பை எடுத்துக் காட்டும். மதனி வசனங்களில் அது குறைவு.
- மதனி வசனங்கள் முனாபிக்குகளின் பண்புகள் பற்றியும் முன்னைய வேதம் வழங்கப்பட்டவர்களது உண்மைத் தன்மை பற்றியும் விளக்கும். ஆனால், மக்கி வசனங்கள் அவ்வாறு இல்லை.

( இவ்வாறான ஐந்து கருத்துக்கள் ஒப்பிட்டு எழுதப்பட்டிருந்தால் அல்லது தனித்தனியாக பத்து கருத்துக்கள் எழுதியிருப்பின் (1x5 = 5 புள்ளிகள்) அல்லது (10 x 1/2 = 5 புள்ளிகள்))

(iii) **முதவாதிர் - ஆஹாத்**

- முதவாதிர் எனப்படுவது ஒரு விடயத்தில் அவர்கள் பொய்யுரைத்தல் சாத்திய மாகாது என்று சொல்லு மளவிற்கு ஒவ்வொரு வகுப்பிலும் (துபகா) அதிகமான எண்ணிக்கையுடைய அறிவிப்பாளர்களால் அறிவிக்கப்படும் ஹதீஸ். ஸனதின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை இவ்விதி பேணப்படல் வேண்டும். அல்ஆஹாத் எனப்படுவது முதவாதிருடைய நிபந்தனைகளை அல்லது முதவாதிரான ஹதீஸின் ஸனதில் அடங்குகின்ற அறிவிப்பாளர்களின் எண்ணிக்கையை எவ்வகையிலும் அடையாத ஹதீஸ்கள்.
- முதவாதிரான ஹதீஸ்கள் சொற்பமானவை. ஆனால், ஆஹாதான ஹதீஸ்கள் அதிகமானவை.
- முதவாதிரான ஹதீஸ்கள் அல்குர்ஆனுக்கு அடுத்த அந்தஸ்தில் வைத்து நோக்கப்படும். ஆனால் ஆஹாதான ஹதீஸ்கள் அவ்வாறல்ல.
- முதவாதிரான ஹதீஸ்கள் அனைத்தும் ஆதாரபூர்வமானதாக கொள்ளப்படும். ஆனால், ஆஹாதான ஹதீஸ்கள் அனைத்தும் அவ்வாறு ஆதாரபூர்வமானதாக கொள்ளப்பட மாட்டாது.
- முதவாதிரான ஹதீஸ்களில் தரப்படுத்தல்கள் இல்லை. ஆனால், ஆஹாதான ஹதீஸ்களில் தரப்படுத்தல்கள் உண்டு.
- முதவாதிரான ஹதீஸ்களை உறுதிப்படுத்த மேலதிக ஆய்வு தேவையில்லை. ஆனால், ஆஹாதான ஹதீஸ்களை உறுதிப்படுத்த மேலதிக ஆய்வு தேவைப்படும்.

(இவ்வாறான ஐந்து கருத்துக்கள் ஒப்பிட்டு எழுதப்பட்டிருந்தால் அல்லது தனித்தனியாக பத்து கருத்துக்கள் எழுதியிருப்பின் (1x5 = 5 புள்ளிகள்) அல்லது (10 x 1/2 = 5 புள்ளிகள்))

(iv) **அக்லாக் - முஆமலாத்**

- அக்லாக் என்பது நடத்தைப் பண்புகளைக் குறிக்கும். முஆமலாத் என்பது மனித நடவடிக்கைகளையும் சமூக உறவுகளையும் குறிக்கும்.
- அக்லாக்குகளை இரண்டு வகைகளாக நோக்கலாம். 'அக்லாகுல் ஹஸனா", 'அக்லாக்குஸ் ஸையிஆ". முஆமலாத் என்பது ஈமான், இபாதா தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளைக் குறிக்கும்.
- 'அக்லாகுல் ஹஸனா" ஈமானின் பலத்தையும், 'அக்லாகுஸ் ஸையிஆ" ஈமானின் பலவீனத்தையும் காட்டும். முஆமலாத் தக்வாவின் அளவிற்கு ஏற்ப சிறப்பாகவும், சிறப்பின்றியும் காணப்படும்.
- அக்லாக் என்பது தனிமனிதனுடன் தொடர்பானது. முஆமலாத் சமூகத்துடன் தொடர்பானது.
- அக்லாக் என்பது உள்ளமும் நடத்தையும் சார்ந்தது. முஆமலாத் என்பது நடத்தை சார்ந்தது.

- அக்லாக் ஹஸனாவை மக்கா காலத்திலேயே நபியவர்கள் பயிற்றுவிக்க ஆரம்பித்தார்கள். முஆமலாத் சார்ந்த விடயங்கள் மதீனா காலத்திலேயே பெரும்பாலும் வழங்கப்பட்டன.

(இவ்வாறான ஐந்து கருத்துக்கள் ஒப்பிட்டு எழுதப்பட்டிருந்தால் அல்லது தனித்தனியாக பத்து கருத்துக்கள் எழுதியிருப்பின் (1x5 = 5 புள்ளிகள்) அல்லது (10 x 1/2 = 5 புள்ளிகள்))

02.

(i) 'தக்வா' என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

(ii) ஒரு முஸ்லிமின் வாழ்வில் தக்வா பெறும் முக்கியத்துவம் பற்றி அல்-குர்ஆன், ஸுன்னாவின் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(iii) ஒரு முஸ்லிம் தனது அன்றாட வாழ்க்கையில் தக்வாவைக் கடைப்பிடிப்பதால் கிடைக்கும் நன்மைகள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு, அவற்றை சுருக்கமாக விளக்குக.

(iv) ஒரு முஸ்லிமின் ஆன்மீக வாழ்வுக்குத் தடையாக அமையும் **ஐந்து** விடயங்களை சுருக்கமாக விளக்குக.

(i)

- "தக்வா" என்பது ஓர் அரபுமொழிச் சொல்லாகும். இது இறையச்சம், தற்காத்துக்கொள்ளல், தவிர்ந்து கொள்ளல், எனும் கருத்துக்களைத் தரும்.
- இஸ்லாமிய வழக்கில் "தக்வா" என்பது அல்லாஹ்வின் கட்டளைகளை முடியுமானவரை எடுத்து நடப்பதும், அல்லாஹ் தடுத்தவற்றை முழுமையாக தவிர்ந்துகொள்வதையும் குறிக்கும்.
- உமர் (ரழி) அவர்கள் உபையிப்னு கஃப் (ரழி) அவர்களிடம் தக்வா என்றால் என்ன? என வினவியபோது, 'நீங்கள் முட்கள் நிறைந்த பதையில் நடந்து சென்றதுண்டா? என வினவினார்கள். ஆம் என்றதும். 'அவ்வாறாயின் எவ்வாறு செல்வீர்கள்? என வினவியபோது, ' எனது ஆடைகளில் முட்கள் தைக்காத வண்ணம் உயர்த்திப்பிடித்துச் செல்வேன் என்றார். அப்போது, அவர், அதுதான் தக்வாவாகும் என கூறினார்கள். அதாவது சமூகத்தில் காணப்படும் அனாச்சாரங்களில் வீழ்ந்து விடாமல் தன்னைக் காத்துக்கொள்வதாகும்.

(பத விளக்கத்துக்கு 2 புள்ளிகளும் வரைவிலக்கணத்துக்கு மூன்று புள்ளிகளுமாக மொத்தம் 5 புள்ளிகள் வழங்குக.)

(ii)

- தக்வா ஈமானின் அடிப்படை.
  மனிதனது அடிப்படை தேவைகளுடன் அல்குர்ஆன் தக்வாவை ஒப்பிடுகிறது
  - 'நீங்கள் கட்டுச்சாதங்களை எடுத்துக்கொள்ளுங்கள். கட்டுச்சாதன்களில் மிகச் சிறந்தது தக்வாவேயாகும்" (அல்பகரா : 197)
  - 'தக்வா எனும் ஆடை, அதுவே சிறந்ததாகும்" (அல்அஃராப் : 27)
- தக்வா இல்லாத எந்தச் செயற்பாடுகளும் இறைவனால் அங்கீகரிக்கப்படாது, 'குர்பானுடைய இறைச்சியோ, அதன் இரத்தமோ அல்லாஹ்வை சென்றடைவதில்லை. மாறாக, உங்களுடைய தக்வாவே அவனைச் சென்றடையும்" (அல்ஹஜ் : 37)
- இறையச்சம் இல்லாமல் மரணித்தால் சுவனம் கிடைக்காது, 'நீங்கள் முஸ்லிம்களாகவே அன்றி மரணிக்க வேண்டாம்". (ஆலு இம்ரான் : 102)
- மனிதனுடைய சகல அடைவுகளையும் பெற்றுக்கொள்வதற்கான வழியாக தக்வா அமைகிறது. 'யார் அல்லாஹ்வை தக்வா செய்கின்றாரோ, அவருக்கு அல்லாஹ் பிரச்சினைகளிலிருந்து வெளியேறும் வழியைக் கொடுப்பான்" (அத்தலாக் : 02)

- ஆளுமை விருத்திக்கான அடிப்படையாக அமைதல். 'யார் அல்லாஹ்வை தக்வா செய்கின்றாரோ, அவருக்கு அல்லாஹ் போதுமானவனாக இருக்கிறான். (அத்தலாக் : 3)
- நபியவர்கள் இறையச்சத்தை வேண்டி பிராத்தித்துள்ளமை, ' இறைவா உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பொழுக்கத்தையும் வேண்டுகிறேன்" (முஸ்லிம்)

இதுபோன்ற ஐந்து கருத்துக்கள் அல்குர்ஆன் அஸ்ஸுன்னா ஆதாரங்களுடன் விளக்கியிருப்பின்
$1x5 = 5$ புள்ளிகள்

(iii)

- சிறந்த ஆளுமையை உருவாக்கும்
- இறையச்சம் நன்மைகளை செய்யத்தூண்டுவதோடு தீமைகளை விட்டும் தடுக்கும்.
- நற்பண்புகளை உருவாக்கும்
- அல்லாஹ், அடியான்,ஏனைய உயிரினங்களின் உரிமைகளைப் பேணி நடக்கும் பண்பை உருவாக்கும்.
- நல்லோருடன் சோர்ந்து நடப்பதோடு, தீயவர்களை விட்டும் தவிர்ந்து நடக்கும் பண்பை உருவாக்கும்.
- சகிப்புத்தன்மையை ஏற்படுத்தும்
- ஹராம், ஹலாலை பேணி நடக்க உதவும்
- துணிவை ஏற்படுத்தும்
- உள அமைதி ஏற்படும்
- பிரச்சினைகளிலிருந்து வெளியேற வழியேற்படல். 'யார் அல்லாஹ்வை தக்வா செய்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் பிரச்சினைகளிலிருந்து வெளியேறும் வழியைக் கொடுப்பான், அவர் எதிர்பாராத விதத்தில் வாழ்க்கை வசதிகளை வழங்குவான்". (அத்தலாக்: 2-3)
- பாவங்கள் மன்னிக்கப்படல். 'விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வை தக்வா செய்தால் உங்களுக்கு பிரித்தரியும் ஆற்றலைக் கொடுப்பான். உங்களதுபாவச் செயல்களைப் போக்கி மன்னிப்பை வழங்குவான்". (அல்அன்பால் : 29)
- மகத்தான கூலி கிடைத்தல் (அத்தலாக் : 05)
- காரியங்கள் இலகுவாக்கப்படல் (அத்தலாக் : 04)
- பிரித்தறியும் ஆற்றல் வழங்கப்படல். (அல்அன்பால் : 29)

(இவை போன்ற 5 கருத்துக்கள் சுருக்கமாக விளக்கியிருப்பின் $1 \times 5 = 5$ புள்ளிகள்)

(iv)

ஆன்மீகத்தைப் பாதிக்கும் தீய பண்புகளான பெருமை, பொறாமை, கர்வம், தீய எண்ணம், நிபாக், ரியாஉ, மனோஇச்சைக்குக் கட்டுப்படல், அவசர புத்தி, கோபம், சுயநலம் போன்றவைகளை ஒரு முஃமின் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

- **அகம்பாவம் / தற்பெருமை**
  - முஃமின்களது பண்புகள் தொடர்பாக அல்குர்ஆன் : 'ரஹ்மானின் அடியார்கள் பூமியில் பணிவாக நடப்பார்கள்"
  - பெருமை, கண்ணியம் என்பன எனது ஆடைகளாகும். இவற்றில் ஒன்றையாவது எவன் என்னிடமிருந்து எடுத்துக் கொள்கிறானோ அவனை நரகில் நுழையச் செய்வேன். (முஸ்லிம்)
  - எவனுடைய உள்ளத்தில் அணுவளவேனும் பெருமை குடிகொண்டிருக்கின்றதோ, அவன் சுவனம் செல்ல மாட்டான். (ஹதீஸ்)

- **பொறாமை**
  - “விறகை நெருப்பு எரிப்பது போல் நன்மைகளைப் பொறாமை எரித்துவிடும். (அபூதாவூத்)
  - “வேதம் கொடுக்கப்பட்டவர்கள், நபியவர்களை எதிர்ப்பதற்கு பொறாமை காரணம்.”(2:119)
  - “அடியார்கள் உள்ளத்தில் ஈமானும் பொறாமையும் இணையாது”(ஹதீஸ்)
- **பொய் பேசுதல்**
  - தன் இரு கண்களும் பார்த்திராத ஒன்றை இரு கண்களுக்கும் காட்டுவதே அனைத்தையும் விட பெரிய பொய்யாகும். (புகாரி)
  - “உண்மை திருப்தியைத் தரும். பொய் ஐயங்களுக்கும் சபலங்களுக்கும் வழிவகுக்கும்.(திர்மிதி)
  - ‘ஒரு முஃமினிடம் எல்லாத் தீமைகளும் இருக்கலாம். ஆனால், அவனிடம் பொய் இருக்கக் கூடாது.” (அஹ்மத்)
- **புறம் பேசுதல்**
  - (எவருடைய குற்றத்தையும்) நீங்கள் துருவித் துருவி விசாரித்துக் கொண்டிருக்க வேண்டாம். உங்களில் ஒருவர் மற்றெவரையும் புறம் பேச வேண்டாம். (49:11)
  - ‘உங்களில் எவனும் தன்னுடைய சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவானா? அதனை நீங்கள வெறுப்பீர்களே! (புறம் பேசுவதும் அவ்வாறே) நீங்கள் அல்லாஹ்விற்குப் பயந்து கொள்ளுங்கள். (49:12)
  - ஒருமுறை ஆயிஷா (றழி) அவர்கள், ஸபிய்யா (ரழி) அவர்கள் குட்டையானவர் எனப் பேசியதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் ஆயிஷாவை நோக்கி “நீர் இப்போது பேசிய வார்த்தையை கடல்நீரில் கலந்துவிட்டால் அது கூட நாசமாகிவிடும் என்றார்கள். (அபூதாவூத்)
- **கோள் மூட்டுதல்**
  - “நபியே! எடுத்ததற்கெல்லாம்) சத்தியம் செய்யும் எந்த நீசனையும் நீர் வழிப்படாதீர். அவன் சதா (புறம் பேசிக்) குற்றங் கூறி, கோள் சொல்வதையே தொழிலாகக் கொண்டு திரிபவன்.
  - ரஸூல் (ஸல்) அவர்கள் கோள் சொல்வதை விட்டும் புறம் பேசுவதை விட்டும் தடுத்தார்கள். (ரியாலுஸ்ஸாலிஹீன்)
  - “கோள் சொல்லித் திரிபவன் சுவனம் நுழையமாட்டான்” (புஹாரி)
- **அவதூறு கூறல்**
  - “எவர் கற்புடைய பெண்கள் மீது அவதூறு கூறி (அதற்கு வேண்டிய) நான்கு சாட்சிகளை அவர்கள் கொண்டு வராவிட்டால், அவர்களை நீங்கள் எண்பது கசையடி அடியுங்கள். பின்னர் அத்தகையவர்கள் கூறும் சாட்சியத்தை எக்காலத்திலும் ஒப்புக்கொள்ளாதீர்கள். நிச்சயமாக அவர்கள் (வரம்பு மீறிய) தீயவர்கள். (24:4)
  - அவதூறு கூறுவது பெரும் குற்றமாகும். அதற்கு 80 கசையடிகள் வழங்கும்படி இஸ்லாம் கூறுகிறது. அது பாரதூரமான குற்றம் என்பதனாலேயே கடும் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
  - அவதூறு கூறுபவரை ‘பாஸிக்” (பெரும்பாவி) என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.
- **பேராசை**
  - பேராசை மனித உள்ளத்தில் வளரும் போது தயாள குணம் மறைந்து கஞ்சத்தனம் ஏற்படும். (அத்தகாஸுர் - 1-2), (ஆல இம்ரான் - 14)
  - உலக இன்பங்களை தேடி அலைபவர்களை விட்டுவிடுங்கள். யார் உலக இன்பங்களில் தன் தேவைக்கதிகம் எடுத்துக்கொள்கிறானோ அவன் அழிவைத் தேடிக்கொள்கிறான் (பஸ்ஸார்)

இதுபோன்ற ஐந்து கருத்துக்கள் அல்குர்ஆன் அஸ்ஸுன்னா ஆதாரங்களுடன் விளக்கியிருப்பின்

1x5 = 5 புள்ளிகள்

03.

(i) பர்ளு ஐன், பர்ளுகிபாயா ஆகிய ஒவ்வொன்றையும் உதாரணங்களுடன் விளக்குக.

(ii) இபாதாவின் நோக்கங்கள் **ஐந்தினை** விளக்குக.

(iii) மனித வாழ்வின் அனைத்து செயற்பாடுகளும் இபாதத்தாக அமைவதற்கு தேவையான நிபந்தனைகள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக.

(iv) ஒரு முஸ்லிம் ஸகாத்தை நிறைவேற்றுவதால் கிடைக்கும் சமூகப் பயன்பாடுகள் **ஐந்தினைச்** சுருக்கமாக விவரிக்குக.

(i)

- **பர்ளு ஐன்** என்பது முஸ்லிமான, புத்தி சுவாதீனமான, பருவமடைந்த ஒவ்வொரு ஆண், பெண் மீதும் விதியாக்கப்பட்ட கடமையைக் குறிக்கும். இதனை நிறைவேற்றுவது ஒவ்வொருவர் மீதும் கடமையாகும். உதாரணமாக : - தொழுகை, நோன்பு...

- **பர்ளு கிபாயா** என்பது ஒரு சமூகக் கடமையாகும். இதனை சமூகத்திலுள்ள ஒரு பகுதியினர் நிறைவேற்றினால் போதுமானதாகும். நிறைவேற்றியோருக்கு மட்டுமே நன்மை கிடைக்கும். நிறைவேற்றாதோருக்கு தண்டனை இல்லை. யாருமே நிறைவேற்றவில்லையெனில் எல்லோர் மீதும் குற்றமாக கருதப்படும். உதாரணமாக : - துறைசார் நிபுணர்களை உருவாக்கல், ஜனாஸாவுக்குரிய கடமைகளை நிறைவேற்றல்.

(இரு பகுதிகளும் உதாரணங்களுடன் விளக்கியிருப்பின் 5 புள்ளிகள்)

(ii)

- **இபாதத் என்பது அல்லாஹ்வின் கட்டளைகளை அவன் மீது கொண்ட அன்பு, கண்ணியத்தின் காரணமாக அவன் கூறிய அடிப்படையிலும், அவனது தூதர் செய்துகாட்டிய அடிப்படையிலும் நிறைவேற்றுவதைக் குறிக்கும்**

இதன் நோக்கங்களாவன : -

- அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிதல்.
- அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுதல்.
- மறுமை வெற்றியை உறுதிப்படுத்தல்.
- ஹுகூகுல் இபாத் மூலம் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றல்.
- உலகின் சீரான செயற்பாட்டுக்கு உந்து சக்தியாக அமைதல்.
- ஹுகூகுல் இபாதை சரியாக நிறைவேற்றும் போது அடியார்களுக்கிடையிலான ஆளிடைத் தொடர்பு சீர்பெறும்.
- பாவச்செயல்களிலிருந்து தவிர்ந்துகொள்ளல்.
- நற்கூலியைப் பெற்று சுவனப்பாக்கியத்தை அடைந்து கொள்ளல்.

(இவை போன்ற ஐந்து விடயங்களை விளக்கி எழுதியிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)

(iii)

- இக்லாஸ் (தூய எண்ணம்)
- ஷரீஆவின் அனுமதி
- ஷரீஆவின் வரையறைகளை மீறாதிருத்தல்
- நேர்த்தியாக செய்தல்
- அடிப்படை வணக்கங்களுக்கு தடையாக அமையாதிருத்தல்

(மேற்கூறிய ஐந்து கருத்துக்களையும் சுருக்கமாக விளக்கி எழுதியிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)

(iv)

- **சகோதரத்துவம் வலிமை பெறுகின்றமை.**
- **ஐக்கியம் ஏற்படுகின்றமை.**
- **சமூக பொருளாதார வளரச்சி / விருத்தி சகல துறைகளிலும் ஏற்படுகின்றமை.**
- பண சுழற்சிக்கு வழிவகுத்தல்.
- சுரண்டலைத் தடுத்தல்
- நிதி நிறுவனங்களை திட்டமிட்டு இயக்க வழியமைத்தல்
- சமூகத்தில் கை நீட்டி வாழும் பழக்கத்தை இல்லாதொழித்தல்
- தொழில் வாய்ப்பிற்கானமூலதனம் பெறுதல்
- பொருளாதார ஏற்றத்தாழ்வை குறைத்தல்

(மேற்கூறிய ஐந்து கருத்துக்களையும் சுருக்கமாக விளக்கி எழுதியிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)

## பகுதி II

04.

(i) இஸ்லாம், வாழ்வாதாரத்துக்காக உழைப்புக்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை அல்-குர்ஆன், ஸுன்னாவின் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(ii) ஒரு முஸ்லிம் தனது அயல் வீட்டாருடன் பேணவேண்டிய உறவுமுறை பற்றிய இஸ்லாத்தின் போதனைகளை விவரிக்குக.

(i)

- இஸ்லாம் உழைப்புக்கு முக்கியத்துவமளிப்பதுடன் ஒவ்வொரு தனிமனிதனையும் உழைக்க ஊக்குவிக்கிறது. ‘ஹலாலான முறையில் உழைப்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்” (தபரானி)
- ‘உழைப்புக்காக வெளியேறிச் சென்று, உணவைப் பெறுபவரை அல்லாஹ்வின் அருளைத் தேடிச் செல்பவர்” என்ற கருத்தை அல்குர்ஆன் குறிப்பிடுகின்றமை. (ஜ/ம்ஆ : 10),
- உழைப்பவர்கள் மறுமையில் நபிமார்களுடன் இருப்பவர். ‘நம்பிக்கையும், நீதமுமுள்ள வியாபாரி மறுமையில் நபிமார்கள், சித்தீகீன்கள், ஷுஹதாக்களுடன் இருப்பர்” (திர்மிதி)
- கைத் தொழிலை ஊக்கப்படுத்தியுள்ளமை.“எவன் ஒருவன் சுய தொழில் மூலம் பெற்ற வருமானத்தைக் கொண்டு உண்ணும் உணவைவிட வேறு சிறந்த உணவை உட்கொள்வதில்லை(புகாரி)

- ஸஹாபாக்கள் உழைப்பில் ஈடுபட்டுள்ள நிலையில் மரணிக்க விரும்பியமை. ' உமர் பின் கத்தாப் (ரழி) குறிப்பிட்டார்கள், ஜிஹாதுக்கு அடுத்த நிலையில் நான் அல்லாஹ்வின் அருளை தேடிக்கொண்டிருக்கும் வேளையில் எனக்கு மரணம் சம்பவிக்க வேண்டும் என விரும்புகிறேன்".
- உழைப்புக்காக முயற்சிப்பவரே தனக்குரிய உணவை பெற்றுக்கொள்வார் என்பதனை சூரா முல்கின் 15 ஆவது வசனம் குறிப்பிடுகிறது.
- உழைப்பதை விடுத்து யாசகம் கேட்பதை இஸ்லாம் வெறுக்கிறது.
- உழைப்பில் ஈடுபடாமல் மஸ்ஜிதில் முடங்கிக் கிடந்த சிலரை உமர் (ரழி) கண்டித்தமை. 'உழைக்காமல், அல்லாஹ்வே! எனக்கு உணவளி என்று கூறுவதனால் அல்லாஹ் உங்களுக்கு வானத்திலிருந்து தங்கத்தையோ வெள்ளியையோ பொழிவதில்லை" எனக் கூறியமை.

(இவை போன்ற ஐந்து கருத்துக்களை விளக்கி எழுதி இருப்பின் 2x5=10 புள்ளிகள்)

(ii)

- அயலார் என்பது 'அல்ஜார்" என அரபியில் அழைக்கப்படும்
- அலி (ரழி) – 'அயல் வீட்டார் என்பவர் எமது சப்தத்தை செவிமடுப்போஉ ஆவார்".
- ஆயிஷா (ரழி) – 'ஒவ்வொரு திசையிலும் உள்ள நாற்பது வீடுகள் அயலவர் ஆவர்".
- அயல்வீட்டார் என்பவர் முஸ்லிம், காபிர், நல்லவன், கெட்டவன், நண்பன், பகைவன், ஊர்வாசி, அந்நிய நாட்டான், நன்மை செய்பவன், தீமை செய்பவன், உறவினன், உறவற்றவன்... என்ற எல்லோரையும் குறிக்கும்

**அண்டை வீட்டாருடன் நடந்து கொள்ள வேண்டிய முறை**

- **கௌரவமாக நடத்தல்:** ' ' ' 'யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசிக்கிறாரோ அவர் தனது அயலாரைக் கண்ணியப்படுத்தட்டும்." (புஹாரி)
- **அன்பளிப்புக்கள் வழங்குதல்:** "முஸ்லிம் பெண்களே! அண்டை வீட்டாருக்குக் கொடுப்பதை அற்பமாகக் கருத வேண்டாம். அது ஆட்டுக் குழம்பாக இருப்பினும் சரியே" (புஹாரி).
- **அண்டை வீட்டாருடன் சிறந்த முறையில் நடத்தல் :** 'அல்லாஹ்வின் பார்வையில் சிறந்த அண்டை வீட்டுக்காரர் தனது அண்டை வீட்டாரின் சிறந்தவர்"
- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், "வாரிசுரிமையைக் கடமையாக்கி விடுவாரோ"... என்ற ஹதீஸ்
- **உபகாரம் புரிதலும், இன்ப துன்பங்களில் பங்கெடுத்தலும்**
- **அயலாருக்கு முதலிடம் வழங்குதல்**
- **பிறரது தீமைகளிலிருந்து அயலவரை பாதுகாத்தல்**
- **அயலானுக்குத் தீங்கேற்படாதவாறு நடந்து கொள்ளல்:** "எந்த மனிதனது தீமைகளிலிருந்து அவனது அண்டை வீட்டான் பாதுகாப்புப் பெறவில்லையோ அல்லாஹ் மீது சத்தியமாக அவன் முஃமினல்லன்" என மூன்று முறை சத்தியம் செய்து கூறினார்கள்"
- தனது எண்ணம், சொல், செயல் அனைத்திலிருந்தும் அயலான் பாதுகாப்புப் பெறவேண்டும்.
- அயலானின் மானம், கௌரவம் என்பன அமானிதமாகப் பாதுகாக்கப்படவேண்டும். அவனது குறைகளைத் தேடக்கூடாது. தெரிந்தாலும் வெளிப்படுத்தக் கூடாது.
- இபாத்தத்துக்களில் ஈடுபட்ட அயலானுக்கு தீங்கிழைத்த பெண் தொடர்பாக நபியவர்கள் கூறியவை...

(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கியிருப்பின் 2x5=10 புள்ளிகள்)

05.

(i) "இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டது." என்ற சிந்தனை வளர ஏதுவான காரணங்களை விளக்குக.

(ii) 'தக்லீத்' சிந்தனையினால் இஸ்லாமிய சமூகத்தில் ஏற்பட்ட பாதக விளைவுகளை ஆராய்க.

(i)

- மொழி ரீதியாக இஜ்திஹாத் எனப்படுவது, முயற்சி செய்தல், உழைத்தல், கஷ்டப்படுதல், பிரயத்தனம் மேற்கொள்ளல் போன்ற கருத்தைத் தரும்.
- பரிபாஷை ரீதியாக, அல்குர்ஆனிலோ சுன்னாவிலோ நேரடியாக தீர்வு கூறப்படாத ஒரு பிரச்சினைக்கு தீர்வு பெறுவதற்காக ஒரு சட்ட அறிஞர் மேற்கொள்ளும் அறிவியல் ரீதியான கடும் முயற்சியாகும்.
- ஹிஜ்ரி 4ஆம் நூற்றாண்டு தொடக்கம் 12ஆம் நூற்றாண்டு வரை இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டமை
- மத்ஹப் மீதான ஆழமான பற்று
- நீதிபதி பொறுப்புக்கு முஜ்தஹித் அல்லாதோர் நியமிக்கப்பட்டமை
- மத்ஹப் கருத்துக்கள் நூலுருப்படுத்தப்பட்டமை
- மத்ஹப் சார்ந்த இமாம்கள் சமூகத்தில் அந்தஸ்து பெற்றிருந்தமை
- தகுதியற்றோர் இஜ்திஹாத் காண முற்பட்டமை.
- மத்ஹப் சார்ந்த இமாம்களுக்குரிய அங்கீகாரம் மற்றோருக்கு கிடைக்காமை
- மனோ இச்சையைப் பின்பற்றும் நிலை அதிகரித்தமை
- மன்னர்களுக்கும், பிரமுகர்களுக்கும் உலமாக்கள் அஞ்சியமை - சில பிரச்சினைகளுக்கு மத்ஹபுடைய இமாம்களது கருத்துக்களுக்கு முரண்பட்டமையால் இப்னு தைமியா, இப்னுல்கையிம் போன்றோர் சிறைவாசம் சென்றமை.
- புதிய பிரச்சினைகளின் போது அல்குர்ஆன், சுன்னாவை விட்டு மத்ஹப் நூல்களை ஆதாரம் காட்டும் நிலை தோன்றியமை
- இமாமைப் பின்பற்றுவது வாஜிப் என்ற சிந்தனை பரவல். இதனால் அனைவரும் அந்த மத்ஹபின் இமாமினது கருத்தைத் தவிர வேறு எவரது கருத்தையும் ஏற்காமை.
- அக்கால முஜ்தஹித்கள் கூட அல்குர்ஆனை விட்டு சட்ட நூல்களில் ஆய்வு செய்ய முற்பட்டமை
- இலாப நோக்குடன் சில சட்ட அறிஞர்கள் ஆட்சியாளர்களுக்கு சார்பாக தீர்ப்பு வழங்கியமையால் பொது மக்கள் மத்தியில் அறிஞர்கள் பற்றிய நம்பிக்கையீனம் ஏற்பட்டமை.
- சில மத்ஹபுகள் அரச அங்கீகாரம் பெற்றமையால் குறித்த மத்ஹபை பின்பற்ற நிர்ப்பந்திக்கப்பட்டமை.
- மாற்றுக்கருத்துக்களை ஆராயாமல் தாம் சார்ந்தோரின் கருத்தை சரிகாண முற்பட்டமை.
- மத்ஹபுகளை கற்றோர் அறிஞர்களாக மதிக்கப்பட்டமையினால் புதிதாக இஜ்திஹாத் செய்ய எவரும் முன்வராமை.
- முன்னைய இமாம்களது கருத்துக்கள் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவையாக கருதி புனிதத்துவம் வழங்கப்பட்டமையால் புதிய முஜ்தஹித்களது கருத்துக்களை மதிக்காமை.

(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கியிருப்பின் பத்து புள்ளிகள் $2x5 = 10$ புள்ளிகள்)

(ii)

- தக்லீத் என்பது அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவிலிருந்து நேரடியாக பிரச்சினைகளுக்குரிய தீர்வை தேடாமல், குறிப்பிட்ட ஒரு மத்ஹபையோ அல்லது ஒரு நபரையோ எவ்வித ஆய்வுமின்றி கண்மூடித் தனமாக பின்பற்றுவதைக் குறிக்கும்.
- தக்லீத் சிந்தனையால் இஸ்லாமிய சமூகத்தில் ஏற்பட்ட பாதக விளைவுகளாக பின்வருவனவற்றை குறிப்பிட முடியும்.
  - மத்ஹப் தீவிரவாதம் வளர்ச்சி கண்டமை
  - மத்ஹபுகளுக்கிடையே அதிக வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டமை
  - தக்லீத் பொதுப்பண்பாக மாறியமையால் இஜ்திஹாத் மேற்கொள்ள தகுதியான இமாம்களும் தக்லீத் செய்ய முற்பட்டமை.
  - குர்ஆன், சுன்னாவை ஆய்வதை விட்டு இமாம்களது கருத்துக்களை ஆராய முற்படுதல்.
  - பகுத்தறிவின் பயன்பாட்டை அறியாது போனமை.
  - அல்குர்ஆன் சுன்னாவுடன் நேரடித் தொடர்பு அற்றுப்போனமை
  - இன்று வரை கால சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப நெகிழ்ந்து கொடுக்கும் இஸ்லாத்தின் சிறப்பை பொதுமக்களால் உணர்ந்துகொள்ள முடியாதுள்ளமை.
  - இமாம்களை மேம்படுத்தும் குழுக்களும் அதற்கெதிராக இமாம்களை தூசிக்கும் குழுக்களும் தோன்றியமை.
  - மத்ஹப் எதிர்வாதம் தோற்றம் பெற்றமையால் சமூகத்தில் பிளவும் பிரச்சினைளும் தோன்றியமை. இதனால் முஸ்லிம் சமூகம் பலமிழந்தமை.
  - கருத்து வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளமை

(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கியிருப்பின் 2x5 =10 புள்ளிகள்)

06.

(i) இஸ்லாத்தில் குடும்ப வாழ்வின் முக்கியத்துவம் பற்றி அல்-குர்ஆன், ஹதீஸ் என்பவற்றின் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(ii) ஒரு முஸ்லிம் தனது மனைவியை தலாக் சொல்வதனால் ஏற்படும் குடும்ப, சமூக ரீதியான பாதிப்புகளை விவரிக்குக.

(i)

- கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், உற்றார் உறவினர் ஆகிய பல தரப்பினரும் ஒருவருக்கொருவர் கொண்டும் கொடுத்தும் மகிழ்ச்சியாக வாழும் வாழ்க்கையே குடும்ப வாழ்க்கையாகும்.
- குடும்ப வாழ்க்கைக்கு எதிரான துறவறத்திற்கு இஸ்லாத்தில் இடமில்லை. ‘துறவறத்தை மனிதர்கள் உருவாக்கிக் கொண்ட செயற்கை வழிமுறை” என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றமை. “(உலகத்தின் சகல இன்பங்களையும் துறந்து விடும்படியான) துறவித் தனத்தை நாம் அவர்கள் மீது கடமையாக விதிக்கவில்லை. எனினும், அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடைய விரும்பி அவர்களே அதனை உண்டுபண்ணிக் கொண்டார்கள். (அல்குர்ஆன் 57:27)
- உஸ்மான் பின் மழ்ஊன் (ரழி) என்ற நபித்தோழர் நபி (ஸல்) அவர்களை அணுகி, குடும்ப வாழ்க்கையில் ஈடுபடாமல் ஆண்மை நீக்கம் மேற்கொள்ள அனுமதி கோரியபோது நபியவர்கள் அதனை நிராகரித்தார்கள். “நபி (ஸல்) அவர்கள் அவருக்கு அனுமதி வழங்கியிருந்தால் நாங்கள் ஆண்மை நீக்கம் செய்திருப்போம்” என்று ஸஃது பின் அபீ வக்காஸ் (ரழி) அறிவிக்கிறார்கள். (புஹாரி)

- தனித்து வாழும்போது உளநோய்க்கு ஆளாவது போலவே, உடல்ரீதியாகவும் பல பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றான். '(நீங்கள் சேர்ந்து வாழக் கூடிய உங்கள்) மனைவிகளை, நீங்கள் அவர்களிடம் மனநிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே அவன் படைத்து, உங்களுக்கிடையில் அன்பையும் நேசத்தையும் உண்டுபண்ணியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும்."
  (அல்குர்ஆன் 30:21)
- ஆணும் பெண்ணும் இயற்கையிலேயே சோடியாகப் படைக்கப்பட்டவர்கள். அச்சோடிகள குடும்பமாக ஒன்றிணைந்து வாழாதவரை முழுமை பெறுவதில்லை.
- 'நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் செலவிடும் ஒரு தீனார், அடிமை விடுதலைக்காக செலவிடும் ஒரு தீனார், ஓர் ஏழைக்கு தர்மம் செய்யும் ஒரு தீனார் உங்களது குடும்பத்துக்காக செலவிடும் ஒரு தீனார் இவற்றுள் அதிகமான நன்மைகளைப் பெற்றுத்தரக் கூடியது குடும்பத்திற்காக செலவிடப்பட்ட தீனாரேயாகும்." (முஸ்லிம்)
- குடும்ப வாழ்க்கையின் மூலம் பொறுப்புள்ள மனிதனாக மாறுகின்றான். இதனால் அவனது வாழ்க்கை ஒழுங்குபடுத்தப்படுகின்றது.
- மனக்கட்டுப்பாடு, சந்ததி விருத்தி, பரிசுத்தம், பாதுகாப்பு, கௌரவம், ஆரோக்கியம் போன்ற பல பயன்கள் திருமணத்தின் மூலம் கிடைக்கின்றன என்பதை ஹதீஸ்கள் எடுத்துக் காட்டுகின்றன.
- 'ஒரு மனிதன் தனது இச்சையைத் தீர்த்துக் கொள்வதும் ஸதகாவாகும்" (முஸ்லிம்)
- உடலின்பத்தைப் பெற, அன்பைப் பரிமாறிக்கொள்ள, குழந்தைகளால் கண்குளிர்ச்சி பெற, கற்பை மானத்தை பாதுகாக்க, முதுமையில் பராமரிக்கப்பட குடும்ப வாழ்க்கை ஒன்றே முழுமையாக உத்தரவாதமளிக்கின்றது.
- விவாகம் அதனுடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு செயற்பாடுகளும் வணக்கமாகும்.
- அல்குர்ஆன் குடும்பவாழ்வை தூண்டுகின்றமை."உங்களில் வாழ்க்கைத் துணை இல்லாதோர்க்கு திருமணம் செய்து வையுங்கள்." (24:32) "வாலிபர்களே! உங்களில் பலமுள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளவும். ஏனெனில் அது பார்வையைக் கட்டுப்படுத்தவும், கற்பைப் பேணவும் சிறந்ததாகும். சக்தியில்லாதவர் நோன்பு நோற்கவும். அது அவருக்குப் பாதுகாப்பாகும்." (புஹாரி)
- இஸ்லாமிய ஷரிஅத்தின் மூன்று பொது நோக்குகளான ளரூரிய்யாத், ஹாஜிய்யாத், தஹ்ஸீனிய்யாத் என்பவற்றுள் அடிப்படை நோக்கமாகிய ளரூரிய்யாத்தில் குடும்ப வாழ்வை உள்ளடக்கப்பட்டுள்ளமை.
- குடும்ப வாழ்வு நபிவழியாகும், 'விவாகம் எனது வழிமுறையைச் சார்ந்தது. யார் அதனைப் புறக்கணிக்கிறாரோ அவர் என்னைச் சார்ந்தவர் அல்லர்"

(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் அல்குர்ஆன், அல்ஹதீஸ் ஆதாரங்களுடன் விளக்கியிருப்பின் 2x5 =10 புள்ளிகள்)

(ii)

- தலாக் எனப்படுவது மொழியில் விடுவித்தல் என பொருள்படும். இஸ்லாமிய வழக்கில் கணவன் தன் மனைவியை விவாகரத்துச் செய்வதைக் குறிக்கும்.
- விதவைகள் அதிகரிப்பதால் ஏற்படும் சமூகப் பாதிப்புக்கள்.
- நடத்தைச் சீர்கோடுகளும் பாலியல் முரண்பாடுகளும்.
- பாலியல் நோய்களும் அதன் விளைவுகளும்.
- இஸ்லாமிய கலாச்சாரம் பாதிக்கப்படுதல்.
- சமுதாயத்துக்கு பாரமாக விதவைகளும், தபுதாரர்களும் உருவாதல்.
- உள நோயாளர்கள் அதிகரித்தல்.
- கவனிப்பாரற்ற குழந்தைகள் அதிகரித்தல்.
- சமூகத்தில் பொருளாதாரப் பிரச்சினைகள் அதிகரித்தல்.

(இவை போன்ற ஐந்து பிரச்சினைகள் விளக்கியிருப்பின் 2x5 =10 புள்ளிகள்

07.

நபி (ஸல்) அவர்களது காலத்தில் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு பின்வருவன ஆற்றிய பங்களிப்பை ஆராய்க.

(அ) மஸ்ஜிதுந் நபவி

(ஆ) நபி (ஸல்) அவர்கள் செய்துகொண்ட உடன்படிக்கைகள்

**(அ) மஸ்ஜிதுந் நபவி.**

**- நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு சென்றவுடன்** சமூகத்தை வழி நடத்த மத்திய தலம் அவசியம் என்ற வகையில் **அமைக்கப்பட்ட பள்ளிவாயிலே மஸ்ஜிதுந் நபவி என அழைக்கப்படுகின்றது.**

- மஸ்ஜித், ஜமாஅத் தொழுகைக்கான இடமாக ஆரம்பிக்கப்பட்டாலும், அது முஸ்லிம் சமூகத்தை எவ்வாறு கூட்டிணைப்பது, அவ்விணைப்பை எவ்வாறு கட்டிக் காப்பது என்பவற்றுக்கான பயிற்சிக்களமாகவும் அமைந்தமை. ஜமாஅத் தொழுகைக்கான அழைப்பு, நடைமுறை என்பன இதனைச் செயல்வடிவில் பயிற்றுவித்தமை.
- மஸ்ஜிதின் ஆன்மீக செயற்பாடுகளும், உலகியல் செயற்பாடுகளும் சமூக வாழ்வுக்கு உறுதுணையாக இருப்பதால் தான் மஸ்ஜிதுடனான உறவுக்கு முக்கியத்துவம் பெறுகின்றது. “ஒரு மனிதன் மஸ்ஜிதுக்குச் செல்வதை வழமையாக்கிக் கொண்டிருப்பதைக் கண்டால் அவன் ஈமானைப் பெற்றிருக்கின்றான் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்.” (திர்மிதி)
- நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுந்நபவியை மையமாக வைத்தே முஸ்லிம் சமூகத்தை கட்டியெழுப்பியமை. அதை அல்லாஹ்வையும் தனிமனிதனையும் இணைக்கின்ற களமாக மட்டுமன்றி தனிமனிதர்களை இணைக்கின்ற களமாகவும் செயற்படுத்தியமை.
- சமூக அங்கத்தவர்கள் அதன் தலைவரை எப்போதும் சந்திக்கக் கூடிய இடமாககாணப்பட்டமை. எனவே, மஸ்ஜிதின் ஒரு பகுதியில் தமது வீட்டை அமைத்துக் கொண்டமை. தொழுகைக்கு வரும் சந்தர்ப்பங்களில் மக்கள் அவர்களைச் சந்திப்பதற்கும் மதீனாவில் குடியிருப்பவர்கள் மட்டுமன்றி மதீனாவுக்கு வெளியே இருந்து வருகின்ற முஸ்லிம்களும், முஸ்லிம் அல்லாதவர்களும், சந்திப்பதற்கு அது வழியாக அமைந்தமை.
- **பிரச்சனைகளை தீர்க்கும் இடமாக காணப்பட்டமை.** – தனிநபர்களும், சமூகமும் எதிர்நோக்கிய பல பிரச்சினைகளின் போது வஹியும், நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலும், சமூகத்துடன் நடத்திய ஷூறாவுமே கைகொடுத்தமை. அவை மஸ்ஜிதில் இடம்பெற்றமை.
- **கல்வி நிலையமாக செயற்பட்டமை** – நபி(ஸல்) அவர்களின் காலத்தில் மஸ்ஜித் கல்வி நிலையமாகச் செயற்பட்டது. அல்குர்ஆன் ஆயத்துக்கள் அங்கு ஓதிக்காட்டப்பட்டன. நபி (ஸல்) அவர்கள் குத்பாக்கள், கலந்துரையாடல் மூலம் பாட போதனைகளை நடத்தினார்கள். அஸ்ஹாபுஸ்ஸ/ப்பாக்கள் நபியவர்களிடம் கற்றுக்கொண்டதோடு, ஏனைய ஸஹாபாக்களுக்குக் கற்றுக் கொடுக்கும் பணியையும் செய்து வந்தார்கள்.
- **பொருளாதார மைய தலமாக செயற்பட்டமை** – சமூகத்தின் பொருளாதாரத் தேவையை நிவர்த்தி செய்யும் இடமாகவும் அது செயற்பட்டது. ஸகாத், ஸதகா, கனீமத் போன்றன கிடைக்கப்பெறும் போது அவை மஸ்ஜிதில் வைத்துப் பகிர்ந்தளிக்கப்பட்டன.
- **நீதிமன்றமாக செயற்பட்டமை** – சமூகப் பிரச்சினைகளைக் கலந்தாலோசித்து தீர்த்து வைக்கும் அதே பணியோடு,சமூகத்தில் நிகழும் குறைகளுக்கு இஸ்லாத்தின் அடிப்படையில் தீர்ப்புக் கூறும் நீதிமன்றமாகவும் அது செயற்பட்டது. நிகழும் குறைகளுக்கு இஸ்லாத்தின் அடிப்படையில் தீர்ப்புக் கூறும் நீதிமன்றமாகவும் அது செயற்பட்டது.
- **சிலபோது இராணுவ பயிற்சி முகாமாகவும், மருத்துவ முகாமாகவும் கூட அது பணியாற்றியமை.** அதன் வளாகத்தில் கூடாரம் அமைக்கப்பட்டு சிகிச்சை வழங்கிய நிகழ்வுகளும் உண்டு.

- **சமய நல்லிணக்க மையமாக தொழிற்பட்டமை** – நஜ்ரான் பிரதேச கிரிஸ்தவ தூதுக்குழுவின் சந்திப்பு.
- **அரச கரும பீடமாக தொழிற்பட்டமை.**

(இவை போன்ற 5 கருத்துக்களை விளக்கியிருப்பின் 2x5 =10 புள்ளிகள்)

(ஆ) **நபி (ஸல்) அவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கைகள்.**

✪ நலனை ஏற்படுத்தும் விதமாகவும், சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் சில உடன்படிக்கைகளை செய்துகொண்டார்கள்.

**முதலாம் அகபா உடன்படிக்கை**

- மதீனாவைச் சேர்ந்த ஆறு நபர்கள் நபித்துவத்தின் பதினொறாவது ஆண்டு ஹஜ்ஜுடைய காலத்தில் நபி (ஸல்) அவர்களின் கையில் இஸ்லாத்தைத் தழுவி, நபி (ஸல்) அவர்களின் தூதுத்துவத்தை தங்கள் கூட்டத்தாருக்கும் தெரிவிப்போம் என்று வாக்குக் கொடுத்திருந்தமை.
- இதை அடுத்து நபித்துவத்தின் பனிரெண்டாம் ஆண்டு ஹஜ் காலத்தில் கஸ்ரஜ் கிளையையும், அவ்ஸ் கிளையையும் சேர்ந்த 12 நபர்கள் மதீனாவிலிருந்து வந்து பைஅத் செய்து கொண்டமை.
- இவர்கள் அனைவரும் மினாவில் 'அகபா' என்ற இடத்திற்கு அருகில் நபி (ஸல்) அவர்களிடம் ஒப்பந்தம் செய்தமை.
- நிபந்தனைகள்:
  - அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்கக் கூடாது
  - திருடக்கூடாது
  - விபசாரம் செய்யக் கூடாது
  - உங்களின் பிள்ளைகளை கொலை செய்யக்கூடாது
  - அவதூறு கூறக்கூடாது
  - நன்மையில் எனக்கு மாறு செய்யக்கூடாது
  - உங்களில் யார் இந்த உடன்படிக்கையை முழுமையாக நிறைவேற்றுகிறாரோ அவருக்கு அல்லாஹ் நற்கூலி வழங்குவான்.
  - யார் சில குற்றங்களை செய்து அதற்காக உலகிலேயே தண்டிக்கப் படுவாரோ அத்தண்டனையே அவர் பாவத்தைப் போக்கிவிடும்.
  - ஒருவர் குற்றம் செய்து அந்த குற்றத்தை அல்லாஹ் மறைத்துவிட்டால் அது அல்லாஹ்வின் விருப்பத்திற்குட்பட்டது. அவன் விரும்பினால் அவரைத் தண்டிக்கலாம் அல்லது மன்னிக்கலாம்
  - தொடர்ந்து மதீனாவில் முஸ்அப் (ரழி) அழைப்பாளராக சென்றமை.

**இரண்டாவது அகபா உடன்படிக்கை**

- நபித்துவத்தின் 13 ஆம் ஆண்டு ஹஜ்ஜுடைய காலத்தில் ஹஜ்ஜுக்காக மதீனாவாசிகளில் முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதவர்களும் கலந்து, எழுபதுக்கும் அதிகமானோர் மக்கா வந்தமை.
- ஆண்களில் 73 பேரும், பெண்களில் இருவரும் கலந்துகொண்டமை.
- **ஒப்பந்தத்தின் அம்சங்கள்:**
  - இன்பத்திலும் துன்பத்திலும் (கட்டளைக்கு) செவிசாய்க்க வேண்டும் கட்டுப்பட வேண்டும்
  - வசதியிலும் வசதியின்மையிலும் செலவு செய்ய வேண்டும்
  - நன்மையை ஏவ வேண்டும் தீமையைத் தடுக்க வேண்டும்
  - அல்லாஹ்வுக்காக நீங்கள் தியாகம் செய்யத் தயாராக வேண்டும்
  - அல்லாஹ்வின் விஷயத்தில் பழிப்பவர்களின் பழிப்பு உங்களைப் பாதித்து விடக்கூடாது

- ஆட்சி, அதிகாரத்தைப் பெறுவதற்காக சண்டையிடக்கூடாது
- நான் உங்களிடம் வந்து விட்டால் நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும்
- உங்களையும் உங்களது மனைவியரையும் பிள்ளைகளையும் பாதுகாப்பதைப் போல் நீங்கள் என்னைப் பாதுகாக்க வேண்டும்
- இதனை நீங்கள் பைஅத் (இஸ்லாமிய ஒப்பந்தம்) செய்து கொடுங்கள். அல்லாஹ் உங்களுக்குச் சொர்க்கத்தைத் தருவான்.

**மதீனா சாசனம்**

- நபி (ஸல்) மதீனாவாசிகளான யூதர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கை

1) அவ்ஃப் கிளையினரைச் சேர்ந்த யூதர்கள், முஃமின்களுடன் இணைந்த ஒரே சமுதாயத்தினராக கருதப்படுவர். இந்த யூதர்களுக்கு அவர்களது மார்க்கத்தில் முழு உரிமை உண்டு. முஸ்லிம்களுக்கும் அவர்களுடன் நட்பு கொண்டவர்களுக்கும் அவர்களின் மார்க்கத்தில் முழு சுதந்திரம் உண்டு. இவ்வாறே அவ்ஃப் கிளையினரை சாராத மற்ற யூதர்களுக்கும் அவர்களது மார்க்கத்தில் முழு சுதந்திரம் உண்டு.

2) யூதர்கள் தங்களின் செலவுகளுக்குத் தாங்களே பொறுப்பாளிகளாவர். அவ்வாறே முஸ்லிம்களும் தங்களின் செலவுகளுக்கு தாங்களே பொறுப்பாளிகளாவர்.

3) இந்த உடன்படிக்கை உடையவர்களிடம் யார் போர் தொடுத்தாலும் அவருக்கு எதிராக முஸ்லிம்களும், யூதர்களும் தங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்துகொள்ள வேண்டும்.

4) யூதர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையிலுள்ள தொடர்பு – நலம் நாடுதல், ஒருவருக்கொருவர் நல்லுபதேசம் செய்தல், உபகாரம் புரிதல் – என்ற அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். குற்றம் புரிவதில் துணை போவது கூடாது.

5) தனது நண்பனின் குற்றத்திற்காக மற்றவர் குற்றவாளியாக மாட்டார்.

6) அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

7) பிறருக்கு எதிரான போரில் முஸ்லிம்களுடன் யூதர்கள் கலந்துகொள்ளும் போது யூதர்களும் போர் செலவுகளில் பங்கெடுக்க வேண்டும்.

8) இவ்வுடன்படிக்கையில் கலந்து கொள்பவர்கள் மதீனாவில் குழப்பம் விளைவிப்பதோ, விஷமத்தனம் செய்வதோ, இரத்தம் ஓட்டுவதோ முற்றிலும் தடுக்கப்பட்டதாகும்.

9) இந்த உடன்படிக்கையில் கலந்து கொண்டவர்களுக்கு மத்தியில் ஆபத்தான சண்டை, சச்சரவுகள் அல்லது ஏதும் பிரச்சினைகள் நிகழ்ந்தால் அதற்குரிய முடிவை அல்லாஹ்வும் அவனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுமே கூறுவார்கள்.

10) குறைஷிகளுக்கும், குறைஷிகளுக்கு உதவி செய்பவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கக் கூடாது.

11) யாராவது மதீனாவின் மீது முற்றுகையிட்டால் அவர்களுக்கெதிராக அனைவரும் போர் புரிய வேண்டும். தங்களுக்குள் உதவி செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தாங்கள் இருக்கும் பகுதியைப் பாதுகாக்க வேண்டும்.

12) இந்த உடன்படிக்கை, அநியாயக்காரனையும், குற்றவாளியையும் தண்டனையிலிருந்து பாதுகாக்காது

**ஹுதைபியா உடன்படிக்கை**

- நபியவர்கள் உம்ரா செய்யச் செல்வதாக கண்ட கனவின் காரணமாக 1400 நபித்தோழர்களுடன் உம்ரா செய்ய மக்கா நோக்கி சென்றபோது. வழியில் இடம்பெற்ற உடன்படிக்கை.

**நிபந்தனைகள்**

- நபியவர்கள் இந்த ஆண்டு திரும்பிச் செல்ல வேண்டும். மக்காவிற்குள் நுழையக் கூடாது. அடுத்த வருடம் முஸ்லிம்கள் உம்ராவிற்கு வந்து மக்காவில் மூன்று நாட்கள் தங்கிக் கொள்ளலாம். சாதாரணமாக ஒரு பயணி தன்னுடன் வைத்திருக்கும் ஆயுதங்களை எடுத்து வரலாம். ஆனால், அவற்றை உறைக்குள் வைத்துக் கொள்ள வேண்டும். முஸ்லிம்களுக்கு எவ்வகையிலும் எந்தவித தொந்தரவும் கொடுக்கப்பட மாட்டாது.
- பத்து ஆண்டுகளுக்கு இரு தரப்பிலும் போர் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கக் கூடாது. அக்காலங்களில் அனைவரும் அச்சமற்று இருப்பார்கள். யாரும் எவருக்கும் எவ்வித தீங்கும் செய்யக் கூடாது.
- யாரொருவர் முஹம்மதுடைய ஒப்பந்தத்திலும் உடன்படிக்கையிலும் சேர்ந்து கொள்ள விரும்புகிறாரோ அவர் அதில் சேர்ந்து கொள்ளலாம். குறைஷிகளின் ஒப்பந்தத்திலும் உடன்படிக்கையிலும் சேர்ந்து கொள்ள விரும்புகிறவர் அதில் சேர்ந்து கொள்ளலாம். எந்த ஒரு கிளையினரும் இந்த இரு வகுப்பால் ஒருவருடன் சேர்ந்து கொள்கிறாரோ அவர் அந்த வகுப்பாரையே சேர்ந்தவராவார். அதற்குப் பின் அந்தக் கிளையினருடன் யாராவது அத்துமீறி நடந்து கொண்டால் அது அந்த வகுப்பினர் அனைவர் மீதும் அத்துமீறியதாகும்.
- குறைஷிகளில் யாராவது தனது பாதுகாவலரான நெருங்கிய உறவினன் அனுமதியின்றி, தப்பித்து முஹம்மதிடம் வந்து சேர்ந்தால் முஹம்மது அவரை குறைஷிகளிடம் திருப்பி அனுப்பி விடவேண்டும். ஆனால், முஹம்மதிடம் உள்ளவர்களில் யாராவது தப்பித்து குறைஷிகளிடம் வந்துவிட்டால் அவரை முஹம்மதிடம் திருப்பி அனுப்பப்பட மாட்டாது.

(இவைகளில் நான்கு உடண்படிக்கைகளை குறிப்பிட்டிருப்பின் இரண்டு புள்ளிகளும்
அவற்றில் இரண்டை விளக்கியிருப்பின் $4 + 4 = 08$ புள்ளியும்,
மொத்தம் $2 + 4 + 4 = 10$ புள்ளிகள்)

08.

பின்வரும் தலைப்புக்களை விளக்குக.

(i) மனித வாழ்வு பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்

(ii) முஸ்லிம்கள் பிற சமூகங்களுடன் நல்லுறவைப் பேண வேண்டியதன் அவசியம்

(i)

- மனிதனைப் பற்றி பல்வேறு சிந்தனைகள் பல்வேறு விதமாக சித்தரிக்கின்றமை
- **பௌத்தம்** : மனிதன் முற்பிரவியின் கரும வினைகளை அனுபவிக்க பிறக்கிறான்
- **கிறிஸ்தவம்** : ஆதம் தவறு செய்தமையால் மனிதன் பாவியாக பிறக்கிறான்.
- **டார்வினிஸம்** : பரிணாம வளர்ச்சியின் ஒரு கட்டமே மனிதன். அவன் படைக்கப்படவில்லை உலகின் ஏனைய படைப்புக்களிலிருந்து வித்தியாசப்பட்டவனல்லன். அவன் ஒரு சடம்.
- மாக்ஸிஸம் : மனிதன் ஒரு பொருளாதாரப் பிராணி, நுகர்வுப் பொருள்.

**இஸ்லாமிய கண்ணோட்டம்** :

- மனிதனுக்கு கலீபா என்ற அந்தஸ்தை வழங்கி அவனை கௌரவப்படுத்தியுள்ளமை. 'பூமியில் எனது பிரதிநிதியைப் படைக்கப்போகிறேன் என்று கூறியதை நபியே நீர் ஞாபகப்படுத்துவீராக" (2 : 30)
- இதர படைப்புக்களிலிருந்து மனிதனை வித்தியாசப்படுத்தி அவனுக்கு உயர்ச்சியை வழங்கியுள்ளமை.
- மனிதனை களிமண்ணினால் படைத்துள்ளமை - "நிச்சயமாக (ஆரம்பத்தில் முதல்) மனிதரைக் களிமண்ணின் சத்திலிருந்து சிருஷ்டித்தோம்." (23:12)
- அல்லாஹ்வின் ஆன்மா ஊதப்பட்டுள்ளமை – "பின்னர் அவரை நான் சரியாக உருவாக்கி, அவரில் என் ஆவியிலிருந்தும் நான் ஊதியபோது, அவருக்குச் சிரம் பணிந்தவர்களாக விழுங்கள் என்று மலக்குகளிடம் அல்லாஹ் கூறினான்." (15:29)
- மனிதன் அல்லாஹ்வினால் அறிவூட்டப்பட்டே உலகுக்கு அனுப்பப்பட்டுள்ளமை:- "பின்பு (ஆதமைப் படைத்து) ஆதமுக்குப் பூமியிலுள்ள) எல்லாப் பெயர்களையும் (அவற்றின் தன்மைகளையும்) கற்றுக் கொடுத்தான்"
- மனிதன் உயர்ந்த படைப்பாகக் கணிக்கப்படுகிறான். "பின்னர் நாம் மலக்குகளை நோக்கி ஆதமுக்கு நீங்கள் ஸுஜூது செய்யுங்கள் எனக் கூறியபோது அவர்கள் (யாவரும்) ஸுஜூது செய்தார்கள்"
- மனிதனுக்கு நேர்வழிகாட்டும் பொறுப்பை அல்லாஹ் ஏற்றுள்ளமை : "நிச்சயமாக என்னுடைய நேர்வழி உங்களிடம் வரும். எவர் என்னுடைய நேர்வழியைப் பின்பற்றுகின்றாரோ அவர் வழி தவறமாட்டார்"
- பிரபஞ்ச அருட்கொடைகள் அனைத்தும் மனிதனுக்காகப் படைக்கப்பட்டுள்ளமை: 'வானம் பூமியிலுள்ள அனைத்தையும் உங்களுக்காக படைத்தான்"
- மனித வாழ்வு ஒரு சோதனைக்காக படைக்கப்பட்டுள்ளமை : "உங்களில் எவர் செயல்களில் மிக்க சிறந்தவர் என்பதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே அவன் வாழ்வையும் மரணத்தையும் படைத்திருக்கின்றான்." (67:02)

  "இவ்வுலகம் மறுமைக்குரிய விளை நிலமாகும்." (ஒரு நபிமொழி)

- பிரபஞ்சம் மனிதனுக்காகப் படைக்கப்பட்டுள்ளதால் அவன் அதனை உணர்ந்து பயன்படுத்த வேண்டியுள்ளமை : 'விசுவாசிகளுக்கு இவை அனைத்தும் இவ்வுலக வாழ்க்கையில் உரியவையாகும். மறுமை நாளில் இவை அவர்களுக்கு மாத்திரமே உரியன" (அல்குர்ஆன்)
- மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி என்றவகையில் இபாதத், இமாரத், கிலாபத் ஆகிய முக்கிய பொறுப்புக்களை சுமத்தப்பட்டுள்ளமை
  அதற்கு வகைகூறக் கடமைப்பட்டுள்ளமை : "நீங்கள் ஒவ்வொருவரும் மேய்ப்பாளர்கள். ஒவ்வொருவரும் அவரவர் பொறுப்பு பற்றி விசாரிக்கப்படுவீர்கள்" (முஸ்லிம்)
- இவ்வுலக வாழ்வு நிரந்தரமற்றது. ஆனால், மறுமை வாழ்வு நிரந்தரமானது.

(இவை போன்ற பத்து கருத்துக்கள் எழுதியிருப்பின் 1x10 புள்ளியும்,
இவைபோன்ற ஐந்து கருத்துக்களை விளக்கி எழுதியிருப்பின் 2 x 5 =10 புள்ளிகள்)

(ii)

- **அல்குர்ஆனும் சுன்னாவும் பிற சமூகங்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளுமாறு தூண்டுகின்றமை.** 'மனிதர்களில் (அக்கிரமம் செய்யும்) சிலரை, சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருந்தால் கிறித்தவர்களின் ஆலயங்களும், அவர்களுடைய மடங்களும், யூதர்களுடைய ஆலயங்களும், அல்லாஹ்வுடைய திருநாமம் அதிகமாகத் தோத்திரம் செய்யப்படுகின்ற மஸ்ஜித்களும் அழிக்கப்பட்டே போயிருக்கும். (22:40)
  "படைப்பினங்கள் யாவும் அல்லாஹ்வின் குடும்பமாகும். அல்லாஹ்விடத்தில் சிறந்தவர் அவனது படைப்பினங்களுக்கு பயனளிப்பவரே" (தபரானி)
- **இன ஐக்கியத்தை ஏற்படுத்தல்** – சகல இனங்களும் கொண்ட சமூகம் வாழ முடியும், "மனிதர்களில் (அக்கிரமம் செய்யும்) சிலரை, சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருந்தால் கிறித்தவர்களின் ஆலயங்களும், அவர்களுடைய மடங்களும், யூதர்களுடைய ஆலயங்களும், அல்லாஹ்வுடைய திருநாமம் அதிகமாகத் தோத்திரம் செய்யப்படுகின்ற மஸ்ஜித்களும் அழிக்கப்பட்டே போயிருக்கும். (22:40)
- **பன்மைத்துவத்தை அங்கீகரித்துள்ளமை** – "உம்முடைய இறைவன் விரும்பியிருந்தால் பூமியில் உள்ள அனவருமே ஒன்றுபட்டு விசுவாசித்திருப்பார்கள். (எனவே) மனிதர்கள் (யாவரும்) விசுவாசிகளாகிவிட வேண்டும் என்று அவர்களை நீர் நிர்ப்பந்திக்க முடியுமா?" (10:99)
- **மனிதன் என்ற வகையில் சகல இன, மதத்தையுடைய மனிதர்களுக்கும் கண்ணியமளித்தல்.** "நாம் ஆதமின் சந்ததியினரை கண்ணியப்படுத்தி விட்டோம்" (அல்இஸ்ரா : 70)
- **மத சுதந்திரத்தை அங்கீகரித்துள்ளமை,** "மார்க்கத்தில் நிர்ப்பந்தம் கிடையாது" (2 : 254)
- **மனித குலத்திற்கு நன்மை பயப்பது ஒவ்வொரு மனிதர் மீதும் கடமை என்ற வகையில்** "மனிதர்கள் அனைவரும் அல்லாஹ்வின் குடும்பம். அல்லாஹ்வின் குடும்பத்திற்கு மிகவும் பயனுள்ளவர்களே அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவர்கள். (முஸ்லிம்)
- **மனிதர்களுக்கிடையில் சகோதரத்துவத்தை வளர்த்தல்**
- **யாவருக்கும் பொதுவான நீதி செலுத்தல்.** (4: 105)
- **அவரவர் தனித்துவத்தைப் பாதுகாக்க :** 'உங்களுக்கு உங்களது மார்க்கம் எனக்கு எனது மார்க்கம்" (109 : 06)

(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் எழுதி விளக்கியிருப்பின் பத்து புள்ளிகள் 5 x 2 =10 புள்ளிகள்)